# In the Court of the Additional District Munsif , Karur

**அசல் வழக்கு எண். 506/2005**

**வா.சா.1 - கௌசிக் நீலாம்பரன்**

**த/பெ. பொன்னுசாமி**

**நாள் : 20.08.2026**

**சாட்சி ஆஜர், சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணை செய்யப்படுகிறார்.**

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

11 முதல் 15 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் ஏற்கனவே 01.08.2026 ம் தேதி 8 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்தததை 11 முதல் 15 பிரதிவாதிகள் தரப்பு ஏற்றுக் கொள்கிறது.

**23 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1. 23 ம் பிரதிவாதி சரளாதேவி தாவா சொத்தில் ஒரு பகுதியை கிரையம் பெற்றவர் என்றால் சரிதான். ஆவண எண்.1042/2007 ன் படி கிரையம் பெற்றார் என்றால் ஆவண எண் தெரியாது, ஆனால் 2007 ம் ஆண்டு கிரையம் பெற்றார். தாவா சொத்தை பல நபர்கள் மனைகளாக கிரையம் பெற்று அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் 1 முதல் 7 மனைகளை 17 முதல் 24 பிரதிவாதிகள் கிரையம் பெற்று அனுபவம் செய்து வருகிறார்கள். அதில் சில பிரதிவாதிகள் வீடு கட்டி, மின் இணைப்பு பெற்று அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். தாவா சர்வே எண் என்ன என்றால் சர்வே எண்.327 ஆகும்.

2. தாவா சர்வே எண்ணில் எனது தந்தைக்கு ஏக்கர் 1.50 செண்ட் நிலம் பாகப்பிரிவினையில் ஒதுங்கியது என்றால் ஏக்கர் 1.50 என்று தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது, ஆனால் 2 ஏக்கர் 4 ¼ செண்ட் எனது தந்தைக்கு ஒதுங்கியது. நான் தவறுதலாக சொல்கிறேன் என்றாலும், எனது தந்தைக்கு 1 ஏக்கர் 50 செண்ட் தான் ஒதுங்கியது என்றால் சரியல்ல. அதைத் தான் நாங்கள் அனுபவம்

செய்து வந்தோம் என்றால் சரியல்ல. 1 ஏக்கர் 50 செண்ட் நிலத்தை மூன்று கிரையப் பத்திரங்கள் மூலமாக விற்பனை செய்துள்ளோம் என்றால் சரிதான். மேற்படி சர்வே எண்.327 தொடர்பாக நாங்கள் ஏற்படுத்திய மூன்று கிரைய பத்திரங்களில் 2 ஏக்கர் 4 ¼ செண்ட் நிலம் இருப்பதாகவும், அதில் 1 ஏக்கர் 50 செண்ட் நிலத்தை கிரையம் செய்து கொடுத்தது போக மீதம் ஏதேனும் நிலம் இருப்பதாக குறிப்பு உள்ளதா என்றால் இல்லை.

3. சர்வே எண்.327 ல் நாங்கள் விற்பனை செய்தது போக எங்களுக்கு எவ்வித இடமோ, பாத்தியமோ இல்லை என்றால் சரியல்ல. தாவா சர்வே எண்ணில் பல கிரைய பத்திரங்கள் ஏற்பட்டுள்ளது என்றாலும் அது செல்லதக்கதல்ல என்று எந்த பரிகாரமும் கோரவில்லை என்றால் இந்த வழக்கு நிலுவையில் உள்ளதால் இதில் ஏற்படும் தீர்ப்பு மேற்படி ஆவணங்களை கட்டுப்படுத்தும். நான் சொல்வது தவறு என்றாலும், மேற்படி ஆவணங்கள் குறித்து உரிய பரிகாரம் கேட்காததால் இந்த வழக்கு நிலைநிற்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. 23 ம் பிரதிவாதி வில்லங்கம் சரிபார்த்து தான் நல்லெண்ணம் அடைப்படையில் கிரையம் பெற்றுள்ளதால் அந்த கிரைய பத்திரம் செல்லத்தக்கது என்றால் சரியல்ல. தாவா சொத்தை அபகரிக்க வேண்டும் கெட்ட எண்ணத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், இந்த வழக்கு தள்ளுபடி செய்யபட வேண்டும் என்றாலும் சரியல்ல.

**வா.சா.1 - கௌசிக் நீலாம்பரன்**

**Taken down by me/before me in Open court and read over / and Interpreted to the deponent and admitted by him/her to the correct**

DHAARANI BAGAVATHIAPPAN Digitally signed by DHAARANI BAGAVATHIAPPAN

**Additional District Munsif,**
**Karur.**